# கோவை பஸ் கண்டக்டருக்கு துணை ஜனாதிபதி விருது
# 50 ஆயிரம் மரக்கன்றுகள் நட்டு சாதனை படைத்தவர்

**கோவை, ஜூன் 10-**

கோவையைச் சேர்ந்த அரசு பஸ் கண்டக்டருக்கு, இந்த ஆண்டுக்கான 'எக்கோ வாரியர்' விருது துணை ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளது.

கோவையைச் சேர்ந்தவர் யோகநாதன்(40); அரசு டவுன் பஸ் கண்டக்டர். பள்ளியில் படிக்கும் போதே, இயற்கையால் ஈர்க்கப்பட்ட இவர், கடந்த 1980லிருந்து மரங்கள் நடும் பணியைத் துவக்கியுள்ளார். அன்றுமுதல் இன்று வரை 50 ஆயிரத்துக்கும் அதிகமான மரங்களை நட்டு, சாதனை நிகழ்த்தியுள்ளார்.

தமிழகத்தின் 30 மாவட்டங்களிலும் இவரால் நடப்பட்ட மரக்கன்றுகள், இன்று மரங்களாகி நிழல் கொடுத்து வருகின்றன. மரக்கன்றுகளை வைப்பதோடு, ஓராண்டுக்கு கண்காணித்து வளர்ப்பது இவரது சிறப்பு.

பள்ளி மாணவ மாணவியரிடம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு இதுவரை, 1687 பள்ளிகளில் 'ஸ்லைடு ஷோ' நடத்தியுள்ளார். மரம் வளர்வது எப்படி, காற்றும் தண்ணீரும் உருவாகும் முறை, அசுத்தக் காற்றை மரங்கள் துாய்மைப்படுத்தும் விதம் போன்றவை விஞ்ஞான பூர்வமாக இந்த காட்சியில் விளக்கப்படுகின்றன.

இதன் பயனாக, 500க்கு மேற்பட்ட பள்ளிகளில் பிளாஸ்டிக் பைகள் மற்றும் பொருட்களைப் பயன் படுத்துவதில்லை என்று மாணவ மாணவியர் உறுதி எடுத்துள்ளனர். கோவை, வடவள்ளி ஊராட்சி ஒன்றிய (தெற்கு) துவக்கப்பள்ளியில் பிளாஸ்டிக் பயன்பாடு முற்றிலுமாகத் தவிர்க்கப் பட்டிருப்பதற்கு இவரது முயற்சியே காரணம்.




துணை ஜனாதிபதி விருது பெற்ற கண்டக்டர் யோகநாதன்

லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப், சிறுதுளி மற்றும் வனத்துறையிடம் சோலை மரக்கன்றுகளை வாங்கி நடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார். அதிலும், வெளிநாட்டைச் சேர்ந்த மர வகைகளை நடுவதில்லை என்பதை இவ கொள்கையாக வைத்துள்ளார்.

மருதமலையிலிருந்து சேரன் மாநக செல்லும் டவுன்பஸ்சில் இவர் நீண்ட காலமாக பணியாற்றி வருகிறார். இந்த வழித்தடத்தில் நான்கு பல்கலைகள் ஒன்பது கல்லுாரிகள் அமைந்துள்ளன இங்கு படிக்கும் மாணவ மாணவியரில் பலரையும் பசுமை நேசிப்பாளராக மாற்றியுள்ளார்.

நாடெங்கும் பசுமையை உருவாக்கப் பாடுபட்டு வரும் இவருக்கு, லயன்ஸ் கிளப் உள்ளிட்ட பல அமைப்புகள் விருது வழங்கியுள்ளன. இந்த பெருமைகளுக்கு மகுடம் சூட்டுவதுபோல் தற்போது துணை ஜனாதிபதியால் இவருக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

டில்லியை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் 'எர்த் மேட்டர்ஸ் பவுண்டேஷன்' என்ற அமைப்பு, சுற்றுச்சூழலுக்காக பாடுபடுபவர்களுக்கு ஆண்டுதோறும் 'சுற்றுச்சூழல் போராளி' (எக்கோ வாரியர்) என்ற விருது வழங்குகிறது. பிரபல மாடலிங் மற்றும் இந்தி நடிகர் ஜான் ஆபிரகாம், யோகநாதன் உட்பட 14 பேர், இந்த ஆண்டு விருதுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கடந்த ஐந்தாம் தேதியன்று உலக சுற்றுச்சூழல் தினத்தில் துணை ஜனாதிபதியின் மாளிகையில் இந்த விருதை துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரி வழங்கினார். தென் மாநிலங்களில் இந்த விருதைப் பெற்றவர் இவர் ஒருவரே. டில்லி தமிழ்ச்சங்கமும் இவரைப் பாராட்டியுள்ளது.